Registered as Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 129 | திங்கட்கிழமை 04 ஏப்ரல் 2022 | பங்குனி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ.40

## சமூக வலைத்தளங்களை முடக்கி மூக்குடைந்த அரசு

கொழும்பு, ஏப்.4

நேற்றுமுன்தினம் இரவு திடீரென இலங்கையில் சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டன. அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நலிவடைய வைக்கும் நோக்குடன் அரசாங்கம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய 15 ➤

### மக்கள் போராட்டத்துக்கு மகத்தான வெற்றி -

# கூண்டோடு அமைச்சரவை விலகல்; இடைக்கால அரசாங்கம் விரைவில்!





கொழும்பு, ஏப்ரல் 4

அமைச்சரவை அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகல் கடிதத்தை பிரதமர் மஹிந்தவிடம் நேற்றிரவு வழங்கியுள்ளனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ச தவிர்ந்த ஏனைய அனைவரும் தங்கள் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகவுள்ளனர். 15 ➤

## ஓயவில்லை மக்கள் போர்



ஊரடங்கை உடைத்தது மக்களின் கிளர்ச்சி

அரசுக்கு எதிராக நேற்றும் போராட்டங்கள்

கட்டுப்படுத்த முடியாது பொலிஸார் திணறல்

நள்ளிரவு கடந்தும் தொடர்ந்தன போராட்டங்கள்

கொழும்பு, ஏப்.4

நாட்டில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தபோதும் நேற்று பல இடங்களில் அரசாங்கத்துக்கும். 15 ➤

## இடைக்கால அரசை உடனே அமைக்குக!

ஜனாதிபதிக்கு 6 தமிழ்க் கட்சிகள் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.4

நாட்டு மக்கள் வலியுறுத்துவது அமைச்சரவை மாற்றத்தை அல்ல, ஆட்சி 10 ➤

## யாழ். பொலிஸாரால் ஒன்பது பேர் கைது!

ஊரடங்கு நேரத்தில் நடமாட்டமாம்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறி நடமாடிய குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரி 15 ➤




## வெளிநாடுகளிலும் பரவியது போராட்டம்

கொழும்பு, ஏப்.4

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக உள்நாட்டில் போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில், வெளிநாடுகளில் வசிக் 15 ➤

## ஊடகவியலாளர்களை மிரட்டிய பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணத்தில் செய்தி சேகரிப்புக்குச் சென்ற ஊடகவியலாளர்களுடன் கடுமையாகநடந்துகொண்ட 10 ➤

## நிமல் லான்ஸா வீடு முற்றுகை

கொழும்பு, ஏக்.4

இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸாவின் வீடு மக்களால் நேற்று முற்றுகையிடப்பட்டது. வீட்டை முற்றுகையிட்ட மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக்கோஷங்களை எழுப்பினர். 15 ➤



## பல்கலைச் செயற்பாடுகளை உடனே நிறுத்தப் பணிப்பு!

கொழும்பு, ஏப்.4

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி, விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரையும் வீடுகளுக்கு அனுப்ப உடனடியாக நடவ 10 ➤



## தடையற்ற மின் கேட்டு உயிரை மாய்த்த நபர்!

ஜனாதிபதி இல்லம் அருகே சம்பவம்

கொழும்பு, ஏப்.4

மிரிஹானாவில் உள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வீட்டுக்கு அருகில் உள்ள மின்மாற்றி 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## "பொதுமக்களின் சக்தியை குறைத்து மதிப்பிடாதே"



நேற்றைய ஊரடங்கு நாளிலும், மினுவாங்கொட - குருநாகல் பிரதான வீதியில் நில்பன்கொட பகுதியில் பொதுமக்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ-5)



## 'கடல் தாண்டியும் எதிர்ப்பு'



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி இலங்கையில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கடல் தாண்டியும் புலம்பெயர் தேசங்களிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நேற்றைய நாளில் முன்னெடுக்கப்பட்டன. அவுஸ்திரேலியாவில் பேர்த், மெல்போர்ன், பிரிஸ்பேர்ண், அடிலெய்ட் ஆகிய 4 நகரங்களிலும், நியூஸிலாந்திலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. (ஒ-5)

## "தடை அதை உடை"




ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் தலைநகர் கொழும்பின் மஹரகம பகுதியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட போராட்டம். (ஒ-5)

## "அமெரிக்காவுக்கு வாருங்கள்"

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின்போது, அமெரிக்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்று எடுக்கப்பட்ட ஒளிப்படம். அமெரிக்காவுக்கு திரும்பி வருமாறு கோத்தாபய ராஜபக்சவுக்கு கூறப்பட்டுள்ளது. உங்களின் பழைய வேலை (எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றுவது) காத்திருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-5)




## 'மாணவர் சக்தி மாபெரும் சக்தி'



பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களால் நேற்றையதினம் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸார், மாணவர்களின் பேரணியைத் தடுக்க முயன்றதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டதுடன், தண்ணீர்ப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு என்பனவும் இடம்பெற்றன. (ஒ-5)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனவாத இரும்பு முகத்தை அசைக்கிறது போர்க்கவிதை

கொழும்பு, ஏப். 4

அரசாங்கத்துக்கு எதிரான கொழும்பு தாமரைத் தடாகத்தில் நேற்றுமுன் தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது எழுதப்பட்ட பதாகை யொன்று சமூக வலைத்தளங்களில் தற்போது ட்ரெண்ட் ஆகியுள்ளது.




அந்தப் பதாகை உல கப்போர்க்கால கவிதை யொன்றைத் தழுவி எழு தப்பட்டுள்ளது.

அந்தப் பதாகையில் "முதலில் அவர்கள் தமி ழர்களைக் குறிவைத்தார் கள். அப்போது நான் குரல் கொடுக்கவில்லை. ஏனென்றால் நான் தமி ழர் இல்லை. பின்னர் அவர்கள் இஸ்லாமியர்க ளைக் குறிவைத்தார்கள். அப்போதும் நான் குரல் கொடுக்கவில்லை. ஏனென்றால் நான் இஸ் லாமியர் இல்லை. இப் போது என்னைக் குறி வைக்கிறார்கள். ஆனால், தற்போது எனக்காகப் பேச எவரும் இல்லை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## முட்டையின் விலை 50 ரூபாவை எட்டும்

கொழும்பு,ஏப்.4

பண்டிகைக் காலம் நெருங் குவதால், ஒரு முட்டையின் விலை 50 ரூபாவாக உயர் வடையும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது. நாட்டில் முட்டை உற்பத்தி 40 வீதத் தால் வீழ்ச்சியடைந்துள் ளது.

கோழித் தீவனங்களுக் கான தட்டுப்பாடு மற்றும் காலநிலை காரணிகளால் உற்பத்தி வீழ்ச்சியடைந் துள்ளது. சிறிய அளவி லான கோழிப்பண்ணை கள் ஏற்கனவே மூடப்பட் டுள்ளன.

தற்போது முட்டையொன்று 30 முதல் 33 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படு கின்றது.

எனினும் எதிர்வரும் பண் டிகைக் காலத்தில் முட்டை யின் விலை 50 ரூபாவை எட்டும் சாத்தியம் காணப் படுகின்றதுஎன்று இலங்கை கோழி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள் ளார். (ஒ-4-இ)

## ஊரடங்கு மீறல் 664 பேர் கைது

கொழும்பு,ஏப்.4

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்த ரவை மீறினர் என்ற குற்றச்சாட்டில் 664 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசின் தவ றான முகாமைத்துவமே காரணம். அத னால் அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் மக் கள்போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இவற்றைக் கட்டுப்படுத்த நாடளாவிய ரீதி யில் நேற்றுமுன்தினம் ஊரடங்கு உத்த ரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைவாக நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியில் 664 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-4-இ)

## நாடு கடந்தது போராட்டம்

கொழும்பு, ஏப். 4

அமெரிக்காவில் தஞ்சமடைந்து வசித்துவரும் பிரபல ஊடகவிய லாளர் போத்தல ஜயந்த, கோத் தாபய அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.




சிரேஷ்ட ஊடகவியலாளரான போத்தல ஜயந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் கடத்தப்பட்டு கடும் சித்திரவதைக்கு உள்ளாக் கப்பட்ட நிலையில் உயிர் அச்சு றுத்தல் காரணமாக அமெரிக்கா வில் தஞ்சமடைந்தார். தற்போது அவர் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

#ComeHomeGota என்ற ஹேஷ் டெக்கினூடாகத் தனது கவனவீர்ப் புப் போராட்டத்தை அவர் முன்னெடுத்துள்ளார்.

கோத்தாபய அமெரிக்கப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்த ஒருவ ராவார். இதனால்தான் அவர் #ComeHomeGota என்ற ஹேஷ் டெக்கை (வீட்டுக்கு வாருங்கள் கோத்தா) பயன்படுத்தியுள்ளார். (ம)

## அனுருத்த பண்டார பிணையில் விடுவிப்பு

கொழும்பு,ஏப்.4

சமூக ஊடகச் செயற்பாட்டாளரும், பல்கலைக்கழக மாணவருமான அனுருத்த பண்டார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக சூழ்ச்சி விளைவித்தார் என்ற குற்றச்சாட் டில் அனுருத்த பண்டார, கொழும்பு மோதர பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், கொழும்பு நீதி வான் நீதிமன்றில் நேற்று அதி காலை ஒரு மணியளவில் முற்ப டுத்தப்பட்ட அவர் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளார்.

இவரது விடுதலைக்காக நீதிமன் றில் 50 க்கும் மேற்பட்ட சட்டத்தர ணிகள் தன்னார்வமாக முன்னிலை யாகியிருந்தனர். (ஒ-4-இ)




ஆடு பகை, குட்டி உறவெண்ட கதையாத்தான் இஞ்ச எல்லாம் நடக்குது. அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் எண்டு எல்லாச் சட்டமும் போட்டுப் பார்த்தும் சனம் அடங்கிற மாதிரி இல்லை. ஊரடங்குச் சட்டம் எண்டா றோட்டுக் குத்தானே வரக்கூடாது. பேஸ்புக்கில என்னவும் எழுதலாம் தானே. அதால ஊரடங்குச் சட்டத் தால வீட்டுக்க இருந்தவை எல்லாம் அரசாங்கத் துக்கு எதிரா கண்டபடி எழுதத் தொடங்கிட்டினம். இதைவிட ஊரடங்குச் சட்டம் போடாமலே இருந் திருக்கலாமோ எண்டு கோத்தா யோசிக்கிற அளவுக்கு உந்த சோசியல் மீடியாக்களில அர சாங்கத்தை எல்லாரும் வைச்சு செய்ய வெளிக் கிட, இனியும் தாங்கேலாது எண்ட கட்டத்தில 'உடனடியா எல்லா சோசியல் மீடியாக்களையும் தடை செய்யுங்கோ' எண்டு அதிகாரியளுக்கு கட்டளை போயிருக்கு. ஜனாதிபதியே சொன் னால் எப்பிடி மறுக்கிறது? அதால எல்லா சோசி யல் மீடியாவுக்கும் உடனேயே தடை வந்திட்டு.

ஆனால் என்னதான் தடை போட்டாலும், அதுக் குள்ள புகுந்து விளையாடுறதுக்கு எங்கட சனத் துக்கு சொல்லிக் குடுக்கத் தேவையில்லையே. முந்தி ஈஸ்டர் தாக்குதல் நடந்த பிறகும் இப்பிடி சோசியல் மீடியாவை தடை செய்யேக்க, எல் லாரும் 'வி.பி.என்' எண்ட வழிக்குள்ளால போய் அதுகளைப் பாவிச்சவை. அதால இந்தமுறை கனக்க யோசிக்காமல், உடனேயே எல்லாரும் 'வி.பி.என்' டவுண்லோட் பண்ணி, வட்ஸப், பேஸ்புக் , ருவிட்டர் எண்டு சோசியல் மீடியாக் களை வழக்கம் மாதிரி பாவிக்கத் தொடங்கிட்டி னம்.

இதில ஆகப்பெரிய பகிடி என்னெண்டால், எந்த அரசாங்கம் சோசியல் மீடியாக்களை தடை செய்திச்சோ அதே அரசாங்கத்தில அமைச்சரா இருக்கிற நாமல் ராஜபக்சவும், இந்த 'வி.பி.என்' மூலமா பேஸ்புக், ருவிட்டரில கருத்துகள் போடத் தொடங்கிட்டார். அதுவும் அரசாங்கத்தின்ர முடிவை விமர்சிச்சு.

"இப்பிடி சோசியல் மீடியாவை தடை செய்த முடிவை நான் மன்னிக்கமாட்டன். எல்லாரும் வி.பி.என் பாவிச்சு சோசியல் மீடியாவைப் பாவிப்பினம். உரிய அதிகாரிமார், இப்பிடியான விசர் வேலையை ஒருக்கா மீள்பரிசீலனை செய்ய வேணும்" எண்ட மாதிரி கருத்துப் போட்டிட்டார். அவையின்ர அரசாங்கம், சித்தப்பா தான் ஜனாதிபதி, அப்பாதான் பிரதமர், அப்பிடியிருந் தும் ருவிட்டர் பதிவு போட்டுத்தான் நாமல் இதைச் சொல்லவேணுமோ? பேசாமல் கோத்தாவுக்கே போன் பண்ணி இதைச் சொல்லியிருக்கலாமே? எல்லாம் படம் காட்டுற விளையாட்டுத்தான். சித்தப்பா அந்தப் பக்கம் தடை போட, பெறாமகன் இந்தப் பக்கம் அதை விமர்சிக்க, பாட்டும் நானே பாவமும் நானே எண்டு சீன் போடுகினம். அவைக்கே நல்லாத் தெரிஞ்சு போச்சு, அரசாங் கத்தின்ர பேர் சனத்திட்ட நாறிட்டுது எண்டு. அதுக் காகத்தான் இந்தப் பாவத்துக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை எண்டு காட்டத்தான் இப்பிடி அரசாங்கத்தின்ர முடிவை எதிர்க்கிற மாதிரி கருத்துக்கள் போட்டு பேய்க்காட்டுகினம்.

அரசாங்கம் போட்ட தடையை அரசாங்கத்தின்ர தலையா இருக்கிற பிரதமர் மீறலாமோ? ஆனால் மீறி இருக்கினம். நேற்று சமூக வலைத்தளங் களுக்குத் தடை போட்ட பிறகும், பிரதமர் அலுவல கத்தில இருந்து ஊடகங்களுக்கு வட்ஸப்பில் தான் செய்தியள் அனுப்பி னவை. அப்ப பிரதமரே மீறேக்க சாதாரண சனம் மீறுறதில என்ன பிழை?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத்தள முடக்கத்தை உடனடியாக நீக்கக் கோரிக்கை

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முன்வைப்பு

**கொழும்பு, ஏப். 4**

**சமூக வலைத்தள முடக்கத்தை நீக்குமாறு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவால் நேற்று நண்பகல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.**

மின்துண்டிப்பு தொடர்பில் நுகர்வோருக்குத் தகவல்களை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் சமூக வலைத்தளங்களின் செயற்பாட்டை மீள ஆரம்பிக்குமாறு தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் அனைத்து தொலைபேசி சேவை வழங்குநர்களுக்கும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க சமூக வலைத்தளங்களின் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் தற்காலிகமாக முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சமூக வலைத்தளங்களில் கருத்துக்களிட அஞ்சாதீர்கள்

கொழும்பு, ஏப். 4

சமூக வலைத்தளங்களில் தங்கள் கருத்துக்களை வெளியிட அச்சப்படவேண்டாம் என ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

பிரதம செயலாளர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், அவசரகால நிலை தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் விதிகளின் கீழ் சமூக ஊடகங்களில் கருத்துக்கள் கட்டுப்படுத்தப்படவில்லை - என்றார். (ம)

# ஓஷத பதவி விலகல்

கொழும்பு,ஏப்.4

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகத்தின் (ICTA)தலைவர் ஓஷத சேனாநாயக்க பதவி விலகியுள்ளார்.

அவர் என்ன காரணத்துக்காகப் பதவி விலகினார் என்ற தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை, சமூக வலைத்தளங்களை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைவாகத் தடை செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஒ-4-இ)

# சித்தப்பாவின் தடையை மீறி 'விபிஎன்' மூலம் ருவிற்றரில் நாமல்

கொழும்பு, ஏப். 4

சமூக ஊடங்களை அரசாங்கம் தடைசெய்துள்ள நிலையில், வி.பி.என். (VPN) மூலம் சமூக ஊடகத்தை செயற்படுத்துவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ச பதிவிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நாடுமுழுவதும் தீவிரமடைந்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தது. பின் ஊரடங்குச் சட்டத்தை அறிவித்தது. நள்ளிரவு முதல் சமூக ஊடகங்களைத் தடைசெய்துள்ளது. எனினும், வி.பி.என். ஊடாக சமூக ஊடகத்தைச் செயற்படுத்த முடியும். அதனைக் கட்டுப்படுத்த முடியாது. அரசாங்கத்தின் தடையை மீறி இலங்கை சமூக ஊடக பரப்பு வி.பி.என். மூலம் ஓரளவு இயங்கி வருகின்றது. இந்த நிலையில், அமைச்சர் நாமலும் வி.பி.என். தொடர்பில் ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

"சமூக ஊடகங்களை முடக்குவதை நான் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன். VPN இல் கிடைக்கும் தன்மை, நான் இப்போது பயன்படுத்துவதைப் போலவே, அத்தகைய தடைகளை முற்றிலும் பயனற்றதாக ஆக்குகிறது. அதிகாரிகள் இன்னும் முற்போக்காக சிந்தித்து இந்த முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும்என்று கேட்டுக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

# சமூக ஊடகத்தடை மனித உரிமை மீறல்

*மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 4



சமூக வலைத்தளங்களைத் தடை செய்தமையானது மனித உரிமை மீறலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களினது பங்குபற்றலுடன் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்தின்போதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று எவ்வித மதிப்பீடுகளும் செய்யப்படாத நிலையில், அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டமை ஒருவகை உரிமைமீறல் செயற்பாடு என்று மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)




# ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.4

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் ஊடக சந்திப்புக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் கடும் தொனியில் அச்சுறுத்தப்பட்டனர்.

கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரால், கட்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் திடீரென கட்சி அலுவலகத்துக்கு வெளியே குவிந்த யாழ்ப்பாணம் பொலிஸார், வெளியில் எவரும் பயணிக்கமுடியாது என்று மிரட்டினர்.

அங்கு மேலதிகமாக பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், புலனாய்வுப் பிரிவினரும் கட்சிஅலுவலகத்தைச் சுற்றிவளைத்துப் ஒளிப்படங்கள் மற்றும் காணொலி எடுத்தனர்.

இதனையடுத்து கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பொலிஸாரிடம் ஊடக சந்திப்பு தொடர்பில் தெளிவுபடுத்தினார். தொடர்ந்து ஊடக சந்திப்பு இடம்பெற்றது. எனினும் பொலிஸாரின் கண்காணிப்பு தொடர்ந்திருந்தது. (ஒ-4-125)

# நாமல் – டிலித் ஜெயவீர ருவிற்றரில் மோதல்

கொழும்பு, ஏப். 4


Tweet

Namal Rajapaksa
@RajapaksaNamal

I will never condone the blocking of social media. The availability of VPN, just like I'm using now, makes such bans completely useless. I urge the authorities to think more progressively and reconsider this decision.
#SocialMediaBanLK #SriLanka #lka

9:51 AM · Apr 3, 2022 · Twitter for iPhone

173 Retweets 576 Quote Tweets 1,026 Likes

Tweet your reply

Dilith Jayaweera @Dilith2 · 45m
Replying to @RajapaksaNamal
Aren't you the digital minister? Can't you tell your uncle ? @GotabayaR

114 85 379

Namal Rajapaksa @RajapaksaNamal · 3m
I have already conveyed my objections. However why don't you also talk to my uncle, your good friend?

6 5 12

அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கும் அத தெரண குழுமத்தின் தலைவரும் ஜனாதிபதி கோத்தபயவின் நண்பருமான டிலித் ஜெயவீரவுக்கும் இடையில் ருவிற்றரில் கருத்துமோதல் ஏற்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களைத் தடைசெய்வது தவறு என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச பதிவிட்ட கருத்துக்குப் பதில் வழங்கிய டிலித் ஜெயவீர, "இலத்திரனியல் அமைச்சரான நீங்கள் ஏன் இதை உங்கள் சித்தப்பாவிடம் (கோத்தபயவிடம்) சொல்லவில்லை?" என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் வழங்கிய நாமல், "நான் என் கருத்துக்களை ஏற்கனவே சொல்லிவிட்டேன். நீங்கள் எனது சித்தப்பாவின் நல்ல நண்பர். ஏன் நீங்கள் இதைப்பற்றிக் கதைக்கவில்லை?" என்று கேள்வி எழுப்பினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரடங்கால் அனைத்தும் முடக்கம்





படங்கள் - ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம்





நாடளாவிய ரீதியில் நேற்று ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால், வீதிகளில் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. நகரங்களுக்குள் நுழையும் பிரதான சந்திகள், வீதிகளில் பொலிஸார், இராணுவத்தினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. (ஒ-4-27,213,125,56,20,113)



மன்னார்



கிளிநொச்சி




முல்லைத்தீவு



ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டபோதும், கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் எரிபொருள் நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் காத்திருந்தனர். (ஒ-4-113)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Priya Ramanathan

ஆமா ... 'கோ கோத்தா ஹோம்'னு அவரை வீட்டுக்கு அனுப்புனதுக்கப்புறம் , ஓவர் நைட்ல சிலோன சிங்கப்பூரா மாத்தப்போற அந்த தலைவன் யாரா இருக்கும் ?

**நமக்கு மட்டும்தான் இந்த டவுட்டா**







Nilan Selvarajah
12 h

#VPN

நெதர்லாந்து,சிங்கப்பூர்,சுவிஸ்

போதும் போதும் லிஸ்டு பெருசாகிக்கிட்டே போகுது

நம்ம கிட்ட பாஸ்போர்ட்டே கிடையாது😂😂



**இன்றைய சிந்தனை**

போராடும் வரை வீண் முயற்சி என்பார்கள். வென்ற பின்பு விடாமுயற்சி என்பார்கள்.

"பிடல் காஸ்ட்ரோ."

**Anchalan Kandasamy**
4 h

இண்டைக்கு உடனயே பெடியளுக்கு VPN தெரியுது எண்டால்; அதுக்கு முழு காரணம் மைத்திரி மாமா தான்..! அவருக்கு நாங்க கடமைப்பட்டிருக்கோம்..!

- அமெரிக்க அண்ணர் -

Àzeem Ìbnû Ânzari
12 h

நீங்க இங்க Social media block பன்னிட்டோம்னு சந்தோசமாக இருக்கா...

அங்கிட்டு பூரா பயலும் VPN download பண்ணி ஆத்தல் எடுக்குறானுங்க

#GoHomeGota #VPN



Mari Marian
2 h

இன்றைய ஊடரங்கை வெளியில் வராமல் முறையாக கடைப்பிடிப்பவர் ஜனாதிபதி மட்டுமே😂😂😂.

**இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து இப்படியொரு பொருளாதார நெருக்கடியை சந்தித்ததே இல்லை**


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"அடுத்தவரின் வாழ்க்கையுடன் ஒப்பிடாமல் தன் வாழ்க்கையை மகிழ்ச்சியாக நினைப்பவன் புத்திசாலி"


-சாணக்கியன்

## அடக்குதலும் உடைத்தெழுதலும்

"தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம்'' என்று பட்டினிக்கு எதிராக பாரதி முழங்கியிருந்தான். ஒரு தனிமனிதனுக்கு உணவு கிடைக்காவிட்டாலே உலகத்தை அழிக்குமளவுக்கு கோபம் வருமென்றால், இங்கே ஒட்டுமொத்த நாடுமே உணவில்லாமல், அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறாமல், கையில் பணமில்லாமல் இருக்கையில் எப்படிப்பட்ட கோபம் வரும்? அந்தக் கோபத்தின் வெளிப்பாடே, நாடெங்கும் பரவலாக வெடித்துள்ள மக்கள் போராட்டங்கள். சில போராட்டங்களை அரசியல்கட்சிகள் ஒழுங்குபடுத்தினாலும் கூட, அவற்றில் கலந்து கொள்ளும் மக்களில் பெரும்பாலானோர் கட்சி சார் பற்றவர்கள். இதுதான் அரசாங்கத்துக்கு மிகப்பெரிய தலையிடி.

அரசியல்கட்சிகளின் போராட்டங்கள் நடந்தால், அதனை ''அரசியல் லாபத்தோடு செய்யப்படுபவை'' என்று ஒரே சொல்லில் ஒதுக்கிவிட்டுக் கடந்துவிடலாம். ஆனால் எல்லாப் போராட்டங்களிலும் கட்சி பேதமின்றி நிகழும் மக்களின் கூடுகை ஆள்வோருக்கு கலக்கத்தையே கொடுக்கின்றது. அதிலும் ஜனாதிபதியின் வீட்டைச்சுற்றிவளைத்து மீரிஹானவில் நடந்த போராட்டம்தான், ''நிலைமை கைமீறிப்போய்விட்டது'' என்பதை ஆட்சியாளர்களுக்கு உறைக்கவைத்தது. இப்படியான தன்னெழுச்சியான மக்கள் போராட்டங்களே துனுசியா, எகிப்து, லிபியா, யேமன் வரை அரபு வசந்தம் என்ற பெயரோடு புயலாக வீசி, அங்கிருந்த ஆட்சியாளர்களை அப்புறப்படுத்தின. அப்படியான நிலை தமக்கும் வந்துவிடுமோ? என்பதுதான் ராஜபக்சக்களின் இப்போதைய அச்சம். அதனால்தான் தனது வீட்டுக்கு முன்னால் நிகழ்ந்த மக்கள் போராட்டத்தை '' திட்டமிட்ட அடிப்படைவாதக் குழு நடத்திய வன்முறை இது. அதில் கலந்து கொண்டவர்கள் இங்கும் அரபு வசந்தத்தை உருவாக்குவோம் எனக் கோஷமிட்டார்கள்'' என்று இந்த நாட்டின் ஜனாதிபதியே கூசாமல் பொய் சொல்லும் நிலைமை உருவாகியிருக்கிறது. அந்தப் போராட்டம் சாதாரண மக்களால், எந்தவிதத் திட்டமிடலும் இன்றி நடந்தேறிய ஒரு போராட்டம் என்பது அதனைப் பார்த்த எல்லோருக்கும் தெரியும். அவர்கள் தமக்கான வாழ்வாதாரத்தைக் கேட்டுத்தான் போராடினார்களே தவிர, அரபு வசந்தம் என்ற சொல்லை ஒருமுறையும் உச்சரிக்கவில்லை. இதனையும் அந்தப் போராட்டத்தை சமூகவலைத்தள நேரலை ஊடாகப் பார்த்தவர்கள் அறிவர். அப்படியிருக்க அரபு வசந்தத்தை போல தானும் தூக்கியெறியப்பட்டுவிடுவேனோ? என்ற பேரச்சம் தொற்றிக் கொண்டதாலேயே, ஜனாதிபதிக்கு அரபுவசந்தம் என்ற சொல் நினைவில் வந்து போயிருக்கிறது.

அரபுவசந்தம் என்ற பெயரில் நிகழ்ந்த மக்கள் புரட்சிகளில், சமூக வலைத்தளங்கள் ஊடாகவே திட்டமிடப்பட்டு, மக்கள் ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர். எனவே அப்படியான நிலை தோன்றிவிடக் கூடாது என்பதற்காகவே, மீரிஹான ஆர்ப்பாட்டம் நடந்த மறுதினமே அவசரகாலச் சட்டத்தையும், அடுத்தநாள் ஊரடங்குச் சட்டத்தையும் கூடவே சமூக வலைத்தளங்களுக்கான தடையையும் இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அரசாங்கம் என்று சொல்வதை விடவும் ஜனாதிபதி கோத்தாபய கொண்டு வந்திருக்கிறார் என்பதே சாலப் பொருத்தம். ஏனெனில் மக்கள் கூட, இந்த அரசாங்கத்தை அகற்றுவதைவிடவும் ''கோ ஹோம் கோத்தா'' என்று ஜனாதிபதி மீதே தம் கோபத்தைக் காட்டுகிறார்கள். எனவே கோத்தாபய என்ற தனிமனிதர் தன் அதிகாரப் பசிக்காக, வயிற்றுப்பசிக்காக போராடும் மக்களை சகல வழிகளிலும் அடக்க முற்படுகின்றார். என்னதான் அதிகாரம் தன் ஆயிரம் கரங்களைப் பயன்படுத்தி அடக்குதலை மேற்கொண்டாலும், மக்களின் எழுச்சியை ஒருபோதும் அடக்கிவிட முடியாது. அதனைத்தான் ஊரடங்குச் சட்டத்தின் மத்தியிலும் நேற்று இலங்கையின் பல பாகங்களிலும் நடந்த போராட்டங்கள் சொல்லி நிற்கின்றன. அத்தோடு இலங்கையையும் தாண்டி, அவுஸ்திரேலியா, தென்கொரியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வெடித்துள்ளன. எங்கெல்லாம் அடக்குமுறை நிகழ்கிறதோ அங்குதான் புரட்சிகளும் நிகழ்கின்றன. இதுவே இலங்கையில் இப்போது நிதர்சனமாகிக் கொண்டிருக்கிறது.




# இதயம் நொருங்குகின்றது

## கிரிக்கெட் ஜாம்பவான் சங்கக்கார வேதனை



கொழும்பு, ஏப். 4

**இலங்கை மக்கள் மிகவும் கடினமான காலத்தை எதிர்கொண்டுள்ளனர். நாளாந்த வாழ்க்கையை கொண்டு செல்வதற்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் விரக்தி நிலையைப் பார்க்கும்போது இதயம் நொருங்குகின்றது - என்று தெரிவித்துள்ளார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு நாளும் முந்தைய நாளைவிட கடினமானதாகக் காணப்படுகின்றது. மக்கள் தங்கள் குரல்களை உயர்த்தி என்ன தேவையோ அதனைக் கேட்கின்றனர். சிலர் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக மனக்கசப்பு மற்றும் சீற்றத்துடன் செயற்படும் அதேவேளை ஏனையவர்கள் அதனை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கின்றனர். மக்களின் குரலை செவிமடுப்பதும், அழிவை ஏற்படுத்தும் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கிவைப்பதும், நாட்டின் சிறந்த நலனைக் கருத்தில்கொண்டு செயற்படுவதுமே சரியான தீர்வாகும் - என்றார். (ம)

## பொருளாதார நெருக்கடி தற்போது அரசியல் நெருக்கடியாக மாற்றம்!



கொழும்பு, ஏப். 4

தற்போதைய பொருளாதார நெருக்கடி குழப்பமடைந்து, அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் அதிகாரத்துவ ஆயுதங்கள் தற்போது வெவ்வேறு திசைகளில் செல்வதால் பொருளாதார நெருக்கடி குழப்பமடைந்துள்ளது. மத்திய வங்கி போன்ற நிறுவனங்கள் ஒரு திசையில் செல்கின்றன, ஏனைய நிறுவனங்கள் மற்றொரு திசையில் செல்கின்றன. நாட்டின் வங்கித் துறையும் ஆபத்தில் இருக்கின்றது. இந்தியக் கடன் சில வாரங்களுக்கு மட்டுமே நாட்டைக் காப்பாற்றும். எண்ணெய் விலை இருமடங்காகக் கூடும். அதிகபட்சமாக ஐந்து முதல் ஆறு வாரங்களுக்கே இந்தியக் கடன் எண்ணெய் இலங்கைக்கு உதவும் - என்றார். (ம)

## லிட்ரோ சிலிண்டர் 21 ஆயிரம் ரூபா

கொழும்பு,ஏப்.4

லிட்ரோ வெற்று எரிவாயு சிலிண்டரின் விலை 21 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

வெற்று எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்யும், விளம்பர இணையத் தளங்கள் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளன. அதேவேளை 12.5 கிலோ எடையுள்ள லாஃப்ஸ் வெற்று எரிவாயு சிலிண்டர் 16 ஆயிரம் ரூபாவுக்கும், 5 கிலோ சிலிண்டர் 9 ஆயிரத்து 900 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

(ஒ-4,இ)

நாளை 05.04.2022 செவ்வாய்க்கிழமை பங்குனி 22

சுபநேரம் : 10.39 - 12.09
ராகுகாலம்: 03.09 - 04.39

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு முயற்சி?



கொழும்பு, ஏப். 4
பொருளாதார நெருக்கடியால் அன்றாட வாழ்க்கையை முன்னகர்த்த முடியாது கிளர்ந்து எழுந்துள்ள மக்களின் போராட்டங்களுக்கு அடிப்படைவாத சாயத்தைப் பூசி நாட்டில் மீண்டும் கறுப்பு ஜூலையை ஏற்படுத்துவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றார்களா என்று கலாநிதி தயான் ஜயதிலக்க கேள்வி எழுப்பியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் பொருளாதார நிலைமைகள் மிகவும் மோசமடைந்துள்ளன. மக்கள் அன்றாடம் தமது வாழ்க்கையைக் கொண்டு நகர்த்தமுடியாது திண்டாடிவருகின்றார்கள். ஆட்சியாளர்களால் அதற்கான தீர்வுகளைக் காண முடியவில்லை. இதனால் கோபமடைந்துள்ள மக்கள் கிளர்ந்து எழுந்து மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் வீட்டினை முற்றுகையிட்டுள்ளனர். அதேநேரம் நாடளாவிய ரீதியிலும் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். அவ்வாறான நிலையில் மிரிஹான போராட்டத்தினை ஜனாதிபதி ஊடகப்பிரிவு அடிப்படைவாதிகளின் போராட்டமாகக் காண்பித்துள்ளது. இந்த நாட்டில் அடிப்படைவாதம் பற்றி பேசப்படுகின்றது என்றால், ஒரே இரவில் இயற்கை உரத்தினைப் பயன்படுத்த வேண்டும் இரசாயன உரத்தினைப் பயன்படுத்தக்கூடாது என்று தீர்மானம் எடுத்து அறிவித்த ஆட்சியாளர்கள் அடிப்படைவாதிகள் இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது. ஆகவே ஆட்சியாளர்களுக்கு அடிப்படைவாதம் பற்றிப் பேசுவதற்கு அருகதையில்லை. மக்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யமுடியாது போராடுகின்றார்கள். அதற்கான தீர்வினை வழங்கும் வரையில் போராட்டங்கள் தொடரத்தான் போகின்றன. மக்கள் போராட்டங்களை அடக்குவதற்கு அவசரகால நிலையை பிரகடனப்படுத்துவது பொருத்தமற்ற அணுகுமுறையாகும். அதேநேரம், 1983ஆம் ஆண்டில் கறுப்பு ஜூலை கலவரங்களில் ஈடுபட்டவர்கள் பின்னர் தம்மை நியாயப்படுத்துவதற்கு ஜே.வி.பி. மீது பழியைப்போடுவதற்கு முனைந்தார்கள். அதேபோன்றுதான் தற்போதும் மீண்டுமொரு கறுப்பு ஜூலைக்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றார்கள் போன்றுள்ளது - என்றார். (ம)

# நாளாந்த மின்னுற்பத்திக்கு 3,500 மெட்ரிக்தொன் டீசல்

## வழங்கப்படுவதை உறுதிப்படுத்தியது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**கொழும்பு, ஏப். 4**
**நாளாந்த மின் உற்பத்திக்காக 3 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் டீசல் தினமும் வழங்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.**

மின்னுற்பத்திக்குத் தேவையான டீசல் இல்லாதமையால் நாட்டில் மின்தடை கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். மின்னுற்பத்திக்குத் தேவையான ஒருதொகுதி டீசல் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டமையால் நேற்றையதினம் மின்துண்டிப்பின் நேர அளவு குறைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே நாளாந்த மின் உற்பத்திக்காக 3 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் டீசல் தினமும் வழங்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் டீசலை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது இறையாண்மைக்கு எதிரானது

## *ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 4
ஜனநாயக ஆட்சியின் நான்காவது தூணாக செயற்படும் ஊடகங்களை கட்டுப்படுத்துவதற்கோ அல்லது ஒடுக்குவதற்கோ ஓர் ஆட்சியாளன் முயற்சி செய்கிறான் எனின் அது மக்கள் இறையாண்மைக்கு சவாலானதும் இறையாண்மைக்கெதிரான மிகப் பெரிய தாக்குதலுமாகும்- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இக்காலகட்டத்தில் அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ள சமூக ஊடக முடக்கமானது நாடு எதிர்காலத்தில் முகம்கொடுக்கவுள்ள ஆபத்துக்களுக்கான முன்னெச்சரிக்கையாகும். நாட்டில் எந்த ஒரு வகையிலும் அவசர நிலை உருவாகவில்லை. பயங்கரவாத செயற்பாடுகளோ நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய செயற்பாடுகளோ அரங்கேறவில்லை. இன்று நாட்டு மக்கள் முகம் கொடுக்கும் மிகப் பெரிய சவால் எதுவென்றால், அன்றாட வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்ய அவசியமானவற்றை பெற்றுக் கொள்ள இயலாமையாகும். அதேபோன்று அதற்குப் பொறுப்பு கூறவேண்டிய மற்றும் பொறுப்புள்ள அரசிடமிருந்து எவ்வாறான உதவியும் பெறாமையாகும். அதற்காக அரசு உடனடியாகத் தலையிடவேண்டும் என்று கேட்கும் பூரண உரிமை மக்களுக்குள்ளது. அது அரசமைப்புச் சட்டத்தின் ஊடாகவே மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
அமைதியாக ஆரவாரமின்றி ஒன்றுகூடல், கருத்து தெரிவித்தல், தகவலறிதல் மற்றும் தகவல்களை பரிமாறுதல் ஆகியன மக்கள் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளாகும். இத்தருணத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அவசரகால சட்டம், ஊரடங்கு உத்தரவு மற்றும் சமூக வலைத்தள முடக்கம் என்பவை, அரசமைப்பின் போர்வைக்குள் நின்று ஒரு குடும்பத்துக்கு சொந்தமானது என நம்பப்படும் அதிகாரத்தை பாதுகாக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சியாகும்.
தற்போதைய ஜனாதிபதியை ஆட்சியில் அமர்த்துவதில் அன்றைய சமூக ஊடகங்கள் மேற்கொண்ட பணி அளப்பரியது. ஆட்சியைக் கைப்பற்றியவுடன் ஆட்சியைக் கைப்பற்ற உதவியவர்களை தாக்குவது ராஜபக்ச அரசியலின் வழமையாகும். அவர்கள் விமர்சனங்கள் மற்றும் அவர்களுக்கெதிரான கருத்துகளை சகித்துக் கொள்ளாது அச்சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு பதில் அளித்தது அடக்குமுறையின் மூலமாகும் என்பது பரகசியமான உண்மையாகும். அண்மைக்காலமாக இடம்பெறும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், நிகழ்பதிவு உபகரணங்கள் (வீடியோ கேமராக்கள்) சேதமாக்கப்படுதல், சமூக ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படுதல் போன்ற நிகழ்வுகள் வெளிச்சத்துக்குக் கொண்டு வருவது ராஜபக்ச அரசியலில் ஜனநாயக கோட்பாடுகளுக்கு இடமில்லை என்பதேயாகும்.
தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள சமூக ஊடக முடக்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி தமது கடுமையான எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்த அடக்குமுறைக்கு எதிராக மக்களுடன் இணைந்து மற்றும் சட்ட ரீதியாக எடுக்க முடியுமான அனைத்து விதமான முயற்சிகளையும் நாம் எடுப்போம். ஒரு குடும்பத்துக்காக நாட்டின் அடிப்படை சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அதற்கெதிராக எம்மோடு இணையுமாறு அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றுள்ளது. (ஒ-இ)

# 4 மாகாணங்களில் பாடசாலைகள் பூட்டு

கொழும்பு,ஏப்.4
வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.
ஏனைய மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் தவணைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக மாத்திரம் பாடசாலைகள் திறக்கப்படும் என்று கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ-4,இ)

# ஐந்து நாள்கள் பூட்டு

கொழும்பு,ஏப்.4
மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளும் இன்று முதல் 8 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்று கத்தோலிக்க தனியார் பாடசாலைகளின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
ஏற்கனவே அரசாங்கப் பாடசாலைகளுக்கு இன்று முதல் மாணவர்களை அழைப்பதா இல்லையா என்பதை அதிபர்கள் தீர்மானிக்க முடியும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4,இ)

# மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.4
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய பஞ்சதள இராஜகோபுர புனருத்தாபன மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணி முதல் இடம்பெறும். இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் செவ்வாய்க்கிழமை 12 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.
தொடர்ந்து 24 நாள்கள் முற்பகல் 10 மணிக்கு மண்டலாபிஷேகம் இடம்பெற்று எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி 1008 சங்காபிஷேகம் இடம்பெறும். (ஒ-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் நாடாளுமன்றம் கலைப்பு மீண்டும் தேர்தல்

**இஸ்லாமாபாத், ஏப்.4**
**பாகிஸ்தானில் பிரதமர் இம்ரான்கானின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.**



பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி இந்த அதிரடி அறிவிப்பை வெளிட்டுள்ளார். மேலும் 90 நாள்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரிப்பு, விலைவாசி உயர்வு ஆகியவற்றுக்கு இம்ரான்கான் தலைமையிலான அரசுதான் காரணம் எனக் குற்றஞ்சாட்டி அவர்மீது எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தன.
இந்தநிலையில், பாகிஸ்தான் நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது. அதில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்பு அரசியல் சாசனத்துக்கு எதிரானது எனக்கூறி இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் காசின் கான் நிராகரித்தார்.
இதனால், கடும் அதிர்ச்சி அடைந்த எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்துக்குள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தின.
நாடாளுமன்றத்துக்கு வருகைதராமல் வீட்டில் இருந்தபடி உரையாற்றிய இம்ரான்கான், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் ஆரிப் ஆல்விக்குக் கோரிக்கை விடுத்தார். எவரது ஆட்சி நடைபெற வேண்டும் என்பதை மக்களே முடிவு செய்யட்டும் என்று இம்ரான்கான் தெரிவித்தார்.
இந்தநிலையில் இம்ரான்கானின் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றத்தை கலைப்பதாகப் பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி அதிரடி அறிவிப்பை வெளியிட்டு 90 நாள்களுக்குள் தேர்தல் நடத்தப்படும் எனவும் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)



ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜேய் லாவ்ரோவ், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கடந்த வெள்ளிக்கிழமை டில்லியில் சந்தித்தார். இதன்போது உக்ரைன் - ரஷ்யா நெருக்கடியில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அவர் பாராட்டியுள்ளார். (ச-இ)

## ஓமிக்ரோனைவிட வேகமாகப் பரவும் புதியவகை வைரஸ்

இங்கிலாந்து, ஏப்.4
இங்கிலாந்தில் ஓமிக்ரோன் வகை கொரோனா வைரஸை விட வேகமாகப் பரவக்கூடிய புதிய வகை மாறுபட்ட வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.
எக்ஸ்.இ என்றழைக்கப்படும் புதிய வகை கொரோனா, ஓமிக்ரோன் வைரஸ் பி.ஏ.1 மற்றும் பி.ஏ.2 திரிபுகளில் இருந்து உருமாற்றம் அடைந்துள்ளது என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. ஒரு நோயாளி கொரோனா வைரஸின் பல்வேறு வகைகளால் பாதிக்கப்படும்போது இது போன்ற பிறழ்வுகள் வெளிப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.
மேலும், புதிய வகை கொரோனா, ஓமிக்ரோனின் பி.ஏ.2ஐ விட 10 சதவீதம் அதிகம் பரவும் தன்மை கொண்டுள்ளது என இங்கிலாந்தின் சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)

## ரஷ்ய எண்ணெய்க் கிடங்கை தாக்கி அழித்தது உக்ரைன்

*முதன்முறையாக எல்லை தாண்டி தாக்குதல்*



மொஸ்கோ, ஏப்.4
ரஷ்யாவின் எண்ணெய்க் கிடங்குமீது உக்ரைன் முதல்முறையாக வான்வழித் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உக்ரைன்- ரஷ்யா இடையேயான மோதல் 38 நாள்களைக் கடந்து நீடிக்கின்றது.
இந்தநிலையில், உக்ரைன் எல்லையில் இருந்து 40 மைல்கள் தூரத்திலுள்ள ரஷ்ய நகரமான பெல்கோரோடில் உள்ள எண்ணெய்க் கிடங்கு மீது கடந்த வெள்ளிக்கிழமை முதல்முறையாக வான்வழித் தாக்குதலை உக்ரைன் நடத்தியுள்ளது.
குறைந்த உயரத்தில் இந்த ஹெலிகொப்டர்கள் ரஷ்ய எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும், இதில் யாரும் கொல்லப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.
எனினும், உக்ரைனின் சார்பாக இந்தத் தாக்குதல் குறித்து எந்த உறுதியான தகவலும் வெளியிடப்படவில்லை. (ச-இ)

## பிரேஸிலில் கனமழை; நிலச்சரிவில் 14 பேர் உயிரிழப்பு

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.
பிரேஸிலில் கடந்த இரு நாள்களாக கொட்டித்தீர்க்கும் கனமழை, நிலச்சரிவு உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களால் அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டு, மீட்பு பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.
அங்கு குடியிருப்புகள், கட்டடங்கள் நீரில் அமிழ்ந்துள்ளன. வீடுகளில் மக்கள் வெளியேறமுடியாது தவித்து வருகின்றனர். நிலச்சரிவால் சாலைகள் சேதமடைந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு ஒரே குடும்பத்தை சேர்ந்த 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது எனவும் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். நண்பர்களிடம் அளவோடு நெருங்குவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**இடபம்:** பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். உழைப்பின் மூலம் கூடுதல் நன்மையைக் காண்பீர்கள். கனவு நனவாகும். வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**மிதுனம் :** வியாபாரத்தில் லாபம் உண்டு. மகிழ்ச்சிகூடும். நண்பருடன் இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும். பயணத்தால் நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காது.

**கடகம்:** உங்களது செயல்களால் உறவினர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பணியை சரியாகப் பயன்படுத்துவீர்கள். புதிய துறையில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்களுக்கு நன்மை ஏற்படக்கூடும். சிலரது உண்மை முகம் தெரியவருவதால் குழப்பம் ஏற்படும். தெய்வீக எண்ணங்கள் பெருகும்.

**கன்னி:** தொலைபேசி வழியாக வரும் செய்தி மனஅமைதியை மீட்கும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி அகலும். [illegible] விடுவீர்கள். பணியிடத்தில் நடக்கும் நிகழ்வு பரபரப்பை ஏற்படுத்தும்.

**துலாம்:** உறவினர்களால் ஏற்பட்ட சிரமங்கள் இன்று நீங்கும். பகைவர் மனம் மாறுவர். தாயின் அன்பைப் பெறுவீர்கள். பிரச்சினை ஒன்று தீரும். நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் விஷயத்தில் தலையிட வேண்டாம் ஒருவிஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வாகன வசதி அதிகரிக்கும். வியாபாரத்தில் வரவு சற்று உயரும்.

**தனுசு:** பயணத்தின்போது பொருள்களைக் கவனமாக வைத்துக்கொள்ளுங்கள். புதிய முதலீடுகள் செய்வதைச் சில காலத்துக்குத் தவிர்க்கவும். சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** பொருளாதார நெருக்கடி சற்றே அகலும். நட்பு வட்டம் விரியும். புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்த தயங்கவேண்டாம். குழந்தைகளால் ஏற்பட்ட சிரமம் நீங்கும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். சொந்தங்கள் உதவி வேண்டி உங்களைத் தேடிவருவர். கடன் பிரச்சினை தீரும். மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** குழம்பிய மனநிலை தெளிவாகி உங்களின் செயற்பாடு மேம்படும். வீண் விவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். பரிசு வாங்குவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு பாடசாலைகளுக்கு இன்றுமுதல் விடுமுறை

**கொழும்பு, ஏப்.4**

**இன்று முதல் வடக்கு, தெற்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.**

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
ஆயினும் இந்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளின் ஆசி ரியர்கள் சேவைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.
ஏனைய மாகாணங்களில் பாடசாலை மாணவர்கள் தவணைப் பரீட்சைக்கு மட்டும் பாடசாலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (எ-இ)

## தட்டுப்பாட்டு மருந்துகளுக்கு 20 மில். டொலர் விடுவிப்பு!

கொழும்பு, ஏப். 4
எதிர்வரும் மூன்று மாதங்களுக்குத் தேவையான தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றுக்காக நிதியமைச்சால் சுகாதார அமைச்சுக்கு 20 மில்லியன் டொலர் விடுவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சுகாதார அமைச்சுக்கு 20 மில்லியன் டொலர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் 3 மாதங்களுக்கு ஓரளவு முகாமை செய்யக்கூடிய வகையில் எம்மால் பணியாற்றமுடியும். தட்டுப்பாடு நிலவும் மருந்துகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்தியக் கடனுதவியின் கீழ் நாட்டுக்கு அவசியமான மருந்துப் பொருள்களுக்காக 80 மில்லியன் டொலர் எதிர்வரும் நாள்களில் கிடைக்கவுள்ளது - என்றார். (ம)



4 ஆவது இலங்கை இராணுவ மருத்துவ படைப்பிரிவு மற்றும் யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கி ஆகியவற்றால் ஒழுங்குசெய்யப்பட்ட இரத்ததான முகாமில் யாழ்ப்பாண பாதுகாப்பு படை தலைமையகத்துக்கு உட்பட்ட காலாட் படை தலைமையகங்கள், படைப்பிரிவு தலைமையகங்கள், படையணிகளின் சேவையாற்றும் இராணுவத்தினர் ஆகியோர் குருதிக்கொடையளித்தனர். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### இடைக்கால...

மாற்றத்தையே மக்கள் கோருகின்றனர். அதனால் இடைக்கால தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று 6 தமிழ்க் கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பவுள்ளன.
செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, த.சித்தார்த்தன் தலைமையிலான புளொட், சி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈபிஆர்எல்எவ், அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கட்சி, எம்.கே.சிவாஜிலிங்கம், ந. சிறீகாந்தா தலைமையிலான தமிழ் தேசியக் கட்சி ஆகியனவே இந்தக் கடிதத்தை அனுப்பவுள்ளன.
மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து, அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே இந்தக் கட்சிகள் கடிதம் ஒன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளன.
இந்தக் கடிதம் நேற்றிரவு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், இன்று ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன இந்தக் கடிதம் அனுப்பும் நடவடிக்கைகளில் பங்கெடுக்கவில்லை. (அ-எ-7)

### பல்கலைச்...

டிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் நேற்று இரவு அறிவித்துள்ளார்.
அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ள நிலையில், கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார். (அ-எ-இ)

### ஊடகவியலாளர்களை...

பொலிஸார், கைதுசெய்வோம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.
கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்துக்கு ஊடகவியலாளர்கள் சென்றபோது, அங்கு வந்த பொலிஸார் ஊடகவியலாளர்களுடன் கடுமையாக நடந்து கொண்டுள்ளனர்.
செய்தி சேகரிப்புக்காகவே வந்துள்ளோம் என்று ஊடகவியலாளர்கள் தெரிவித்து அடையாள அட்டைகளைக் காண்பித்தபோதும், தற்போது நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், யாராக இருந்தாலும் கைது செய்வோம் என்று பொலிஸார் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.
அந்த இடத்துக்கு வந்த யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியாட்சகர், உடனடியாக அந்த இடத்தில் இருந்து அகலாது விட்டால் கைது செய்வேன் என்று ஊடகவியலாளர்களுடன் கடும் தொனியில் வாக்குவாதப்பட்டுள்ளார். ஊடகவியலாளர்களின் பெயர் விவரங்கள், அடையாள அட்டை இலக்கங்களும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன.
அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுடனும் பொலிஸார் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அத்துடன் அந்தப் பகுதியில் பெரும் எண்ணிக்கை [illegible] பொலிஸாரும் குவித்தனர். (எ-125,27,26)

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

### பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கான பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | பிணைப் பணம்/ காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 4 | KN/EB/DO4/IMP /KQ/1104-2 | கண்டாவளை பிரதேச செயலாளர் விடுதிக்குரிய மேம்படுத்தல் வேலைகள் | 2.21 மில்லியன் | C8 and C7 Building | ரூபா 23000/- 25.07.2022 வரை | 2000/- |
| 5 | KN/EB/DO4/IMP /PQ/1104-3 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் விடுதிக்குரிய மேம்படுத்தல் வேலைகள் | 2.69 மில்லியன் | C8 and C7 Building | ரூபா 27000/- 25.07.2022 வரை | 2000/- |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட (04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:- 0212285663, பக்ஸ் இல: 0212283966)
3. கேள்வி ஆவணங்களை 05.04.2022 ஆம் திகதியிலிருந்து 26.04.2022 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting ) 18.04.2022 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/……………" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 27.04.2022 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குமுன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. [illegible] விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

திருமதி.[illegible]
திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் /மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(CR 377701-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சியைத் தவிர்க்கவே காபந்து அரசைக் கோருகிறோம்!

## அமைச்சர் வாசுதேவ விளக்கம்



**கொழும்பு, ஏப். 4**

**அரசுக்கு எதிரான மக்களின் ஜனநாயகப் போராட்டம் இராணுவ ஆட்சிக்கு வித்திடக்கூடாது என்பதற்காகவே அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசைக் கோருகிறோம் என நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகள் 'காபந்து அரசாங்கம்' அமைப்பது குறித்து ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் வினவிய போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் கடுமையாக கிளர்ந்தெழுந்துள்ளது.

எனது அரசியல் அனுபவத்தில் தற்போதைய நிலைமையை முன்னொரு போதும் காணவில்லை. அரச தலைவருக்கு எதிராக நாட்டு மக்கள் இதற்கு முன்னர் இவ்வாறு வீதிக்கிறங்கவுமில்லை.

பொருளாதார நெருக்கடியை அரசாங்கம் வேண்டுமென்றே தீவிரப்படுத்தி யுள்ளது. அரசில் முக்கிய பதவியை வகிப்பவர்கள் அரசாங்கத்தை பலவீனப்படுத்தி, நாட்டு மக்களை வீதிக்கிறக்கி தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டதன் பெறுபேறு தற்போது மக்கள் போராட்டமாக வெளிப்படுகிறது.

நாட்டு மக்கள் எதிர் கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் எவ்வித தீர்மானங்களையும் செயற்படுத்தவுமில்லை, செயற்படுத்துமாறு பரிந்துரைத்த தீர்மானங்கள் குறித்து அவதானம் செலுத்தவுமில்லை.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் மீண்டும் ஆட்சிமாற்றத்துக்காக வீதிக்கி றங்கியுள்ளார்கள்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் ஜனநாயக ரீதியிலான போராட்டம் இராணுவ ஆட்சிக்கு வித்திடக் கூடாது என்பதற்காகவே இடைக்கால அரசாங்கத்தைக் கோரியுள்ளோம் - என்றார். (ம)



## கொக்குவில் பகுதியில் 26கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 4

கொக்குவில் கிழக்குப் பகுதியில் 57 லட்சம் ரூபா பெறுமதியான 26 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசியத் தகவலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே கஞ்சாவை வைத்திருந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சிலர் தப்பியோடியுள்ள நிலையில், அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. (ம-23)

## வங்கிச் சேவைகளும் பாதிப்பு?

நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி காரண மாக, ஏ.ரி.எம் மற்றும் சி.ரி.எம் இயந்திர சேவைகள் தற்காலிகமாகப் பாதிக்கப்படலம்என்று தனியார் வங்கிகள் எச்சரித்துள்ளன.

மின்சார விநியோகத்தில் நிலவும் கட்டுப்பாடுகள் காரணமாக, சில கிளைகள் மூடப்படலாம் என்றும் முன்னணி தனியார் வங்கிகள் அறிவித்துள்ளன.

(ஒ - 4.இ)


## காணி தேவை

ஏ9 வீதியில் மீசாலை தொடக்கம் கைதடி வரையான பகுதியில் காணி தேவை.
வீட்டுடன் சேர்ந்த காணி விரும்பத்தக்கது.
நல்லூர் கந்தசுவாமி கோவிலை அண்டிய பகுதியில் வீடு அல்லது காணி தேவை.

தொடர்பு: 077 659 0606 (CR 8206)1-6

## தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
1. விற்பனைப் பிரதிநிதி (A/L)
2. வேலைத்தள வேலையாட்கள்
(சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது).

077 1650 093 (CS 19190)1-6

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை 2021



க.சகானா
(152 புள்ளிகள்)

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றும் சாதனை படைத்த க.சகானா அவர்களையும் 92% சித்தி வீதத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த ஏனையா மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

70 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்கள் விபரம்

1. சி.துாரிகா - 145
2. க.பர்மிகா - 143
3. ச.அஸ்வினா - 139
4. செ.கிருத்திகா-138
5. ச.சாங்காயினி - 136
6. கி.சுதர்சினி - 135
7. கே.கேனுஷா - 123
8. த.ஜினோசன் - 95
9. ம.அபிராமி - 94
10. அ.மாதங்கி - 87
11. இ.நிதர்சன் - 70

அதிபர், ஆசிரியர்கள்
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
மிருசுவில்

(CR 37789) 1-6

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் நிரந்தர குடியுரிமை உடைய, உயர் தொழில், 32 வயது, திருவோண நட்சத்திரம் உடைய, பதிவு திருமணம் செய்து விவாகரத்து பெற்ற மணமகனுக்கு படித்த, அழகிய, பொருத்தமான மணமகள் தேவை.
(சீதனம் எதிர்பார்ப்பு இல்லை).

தொடர்பு: 077 6740 469

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடச் சந்தியிலிருந்து முதலாம் ஒழுங்கை பகுதியில் 20 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (இரண்டு பரப்புகளாகவும் பிரித்து கொடுக்கப் படும்) ஒரு பரப்பின் விலை எட்டு லட்சம் (8 லட்சம்)
பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM

தொடர்பு: 077 862 6251, 074 008 9086

## 2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தேர்தல் ஆணைக்குழு**
011-2868441 /
www.elections.gov.lk

## சேவைநலன் பாராட்டும் அகவை நாள் வாழ்த்தும்

**மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தில் 02.07.2015 முதல் அதிபராக சேவையாற்றி 01.04.2020 அன்று ஓய்வுபெற்ற**

**திரு.குலசேகரம்பிள்ளை ஜெகதீஸ்வரன் (SLPS-1)**

(ஓய்வுநிலை அதிபர் மு/யோகபுரம் ம.வி , தேசிய பாடசாலை)



அவர்களை எமது பாடசாலைச் சமூகம் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புடனும் உடல் உள ஆரோக்கியத்துடனும் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.


**சேவை விவரம்:**

மு/மல்லாவி மத்திய கல்லூரி - ஆசிரியர் - 14.12.1987 - 31.12.1989
யாழ்/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 01.01.1990 - 31.12.1991
மு/அலம்பில் றோ.க.வித்தியாலயம் -01.01.1992 - 31.01.1993
மு/பாலிநகர் மகா வித்தியாலயம்-ஆசிரியர் - 01.02.1993-31.12.1997
மு/நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை - ஆசிரியர் -01.01.1998-22.06.1998
மு/நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை - அதிபர் -23.06.1998-01.09.2002
மு/அணிஞ்சியன்குளம் த.க.வி -அதிபர் - 02.09.2002-01.07.2015
மு/யோகபுரம் மகா வித்தியாலயம் -அதிபர் - 02.07.2015-01.04.2020

**பாடசாலைச் சமூகம்**
**மு/யோகபுரம் ம.வி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## விஸ்வலிங்கம் அரிச்சந்திரன்

அராலி மேற்கு, கொட்டைக்காடு வட்டுக்கோட்டையை பிறப்பிட மாகவும் காரைநகர் நட்டுபாளி கோவளத்தை வசிப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் அரிச்சந்திரன் கடந்த (02.04.2022) சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், மோகனம்பாள் (ராதா) சத்தியா (கீதா-லண்டன்), கேதீஸ்வரன் (பெரியவன் - கஜாணன் ஸ்ரோர்ஸ்-சாங்கரத்தை), ஜெகதீஸ்வரன் (சின்னவன், R.K ரவல்ஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரன் ஆகி யோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் புஸ்பராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜாணன் (கொக்குவில் இந்துக் கல்லூரி தரம்-10 மாணவன்), அபிசாந்த், அபிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வராணி, சண்முகநாதன் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, சபாரத்தினம், பரஞ்சோதி, வீரசிங்கம், சங்கரப்பிள்ளை மற்றும் அன்னலட்சுமி ரோகணனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஒட்டுமட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டைக்காடு கொத்துத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS 19185 (1/6)

தோற்றம் 27.12.1950 | மறைவு 02.04.2022

543, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.
0777 163 109

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கோபாலன் தவமணி (சகுந்தலா)



கூவில் புலோலி தென்மேற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலன் தவமணி அவர்கள் கடந்த (29.03.2022) செவ்வாய்க்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கிட்டினன் செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கிட்டிணன் கோபாலன் அவர்களின் அன்பு மனைவியும், லீலாவதி, இரத்தினசிங்கம் (இலண்டன்), செல்வரத்தினம், சரோயா, இளவதனி (இலண்டன்), பத்மநாதன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிருஷ்ணானந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), சிவாகிருஷ்ணன் (பிரான்ஸ்), கிருஸ்ணமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், கனகதுர்க்கா (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணசுபரதி (லண்டன்), கீர்த்திகா (பிரான்ஸ்), ரேகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமி யாரும், அனோஜன், அனோஜினி, அஜந்தன், அருண்குமார், அபிராமி, அச்சுதன், அஜனி, அரவிந்தன், வைஷ்ணவி, வைஷாளி, வைஷ்ணி, ஆதிரிஜன், ஆதவன், றெமோஜன், கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இயோனாவின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் (இலங்கை நேரப்படி) 1 Avenue du marechal juin 95503 Gonnesse எனும் முகவரியில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் 95 rue Marcel sembat 93430 Villetaneuse என்னும் முகவரியில் அமைந்துள்ள மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

கிருஷ்ணானந்தன்(ஆனந்தன்) - மகன்:- +33647854485 (பிரான்ஸ்)
பவானி - மகள்:- +33769696426 (பிரான்ஸ்)
கோபாலகிருஷ்ணன்(ஜீவன்) - மகன்:- +447412655205 (லண்டன்)
சிவாகிருஷ்ணன்(சிவா) - மகன்:- +33603673374 (பிரான்ஸ்)
கிருஷ்ணமோகன்(மோகன்) - மகன்:- +447429200392(லண்டன்)
செல்வகிருஷ்ணன்(செல்வம்) - பெறாமகன்:- +94778695557, 0212260045 (இலங்கை)
கிருஷ்ணகுமார்(குமார்) - மருமகன்:-+33648291906 (பிரான்ஸ்)

(CR 37777) (1/6)

மண்ணில் 20.06.1949 | விண்ணில் 29.03.2022

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி சிவநாதன் சிவபாக்கியம்

வசாவிளான் கரம்பக்கடவையை பிறப்பிடமாகவும் கட்டப்பிராய், கல்வியங் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாதன் சிவபாக்கியம் அவர்கள் கடந்த (02.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் செல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு மாணிக்கம் தம்பதியரின் மரு மகளும், சிவநாதனின் அன்பு மனைவியும், ருசாந்தினி, நிசாந்தா, நிரோஜன், நிரோஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேஸ்வரி, சின்னமலர், இராசலிங்கம், ஜெயலிங்கம், இராசமலர், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜபாஸ்கரன், பிறேம்ஜித், நிவேதா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகாஷ், தர்மிகன், பிரித்திக், பிருத்வின், சஸ்மிகா ஆகியோரின் அம்மம்மாவும், கிசானா, சைலா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு, கோப்பாய்,
பிராயடி, கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19184) 1/6

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 07 . 1954



மறைவு
02 . 04 . 2022

### சிவஞானம் பிரேமகுமாரன்

(Retired. Chief Marine Engineer, Technical Superintendent)

யாழ். காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை 4A-இராமகிருஷ்ண அவென்யூயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் பிரேமகுமாரன் அவர்கள் கடந்த (02.04.2022) சனிக்கிழமை அன்று அகால மரணம் எய்தினார்.

அன்னார், காங்கேசன்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற புகையிரதநிலைய அதிபர், காலஞ்சென்ற சிவஞானம்-சரஸ்வதி, கனகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புத்திரனும், ஓய்வு பெற்ற அதிபர், காலஞ்சென்ற பண்டிதர் மா.குமாரசுவாமி-சுகிர்தம் தம்பதிகளின் அருமை மருமகனும், கமலவதனியின் ஆருயிர் கணவரும், அருண்ன் (Civil Engineer, USA), பிரணவன் (Financial Consultant, Canada), துவாரகன்(Marine Engineer, Sri Lanka) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினி (USA), சுகுமாரன் (Sri Lanka), காலஞ்சென்ற ரவிக்குமாரன், இன்பகுமாரன் (Norway), மாதினி (Sri Lanka), ஜீவகுமாரன் (Sri Lanka) ஆகியோரின் ஆசைச் சகோதரனும், Dr.சண்முகநாதன், ஸ்ரீபத்மினி, வனிதா, ஸ்ரீதரன், ஜெயகுமாரி, மதிவதனி, ஜெயவதனி, காலஞ்சென்ற கமலநாதன், வைகுந்தநாதன், கைலைநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பார்வை: Jayaratne Funeral Parlour, Wednesday, April 6th, 2022, 9am - 2pm
கிரியை: Jayaratne Funeral Parlour, Wednesday, April 6th, 2022, 2pm - 4pm
தகனம்: Borella, Hindu Cemetery.

தொடர்புகளுக்கு:
அருணன் - மகன் : 001-775-771-4627
பிரணவன் - மகன் : 001-613-558-4325
துவாரகன் - மகன் : 075 899 9044

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 19187) 1/6

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி ஞானசுந்தரம்

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஞானசுந்தரம் அவர்கள் 01-04-2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமுத்து, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரெத்தினேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், பவானி(இலங்கை), ஜெயனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம்(சிவா- இலங்கை), சத்தியரூபன்(ரூபன்- லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வினோஜா, ஜெயசகி ஆகியோரின் அன்புப்பேரனும், பூலோகசுந்தரி (சுந்தரி- லண்டன்), திருநேசச்செல்வம்(பவா- கொழும்பு), காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான காசிநாதன், விநாயகராஜா, பஞ்சரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ராசு- ராசையா, தம்பிராசா- பாக்கியம், பாக்கியம்- செல்லத்தம்பி, ரத்தினம்- லோகநாயகி, மனோன்மணி- நடராஜா ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.04.2022) திங்கட் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சுப்ரமணியம் சிவயோகம் பத்மினியம்மா

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த சுப்ரமணியம் சிவயோகம் பத்மினியம்மா அவர்கள் நேற்று (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் சிவயோகம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இடைப்பிட்டியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் சுப்ரமணியம் செல்லமுத்து அவர்களின் அன்பு மகளும், ஆயிலையைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சுப்ரமணியம் மேரி சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும், தயாபரன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி), சந்திராதேவி (சட்டத்தரணி), நிர்மலாதேவி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரியின் அன்பு மாமியும், காலஞ்சென்ற கந்தையா, கார்த்திகேசு, பூபதி, சரவணபவான் ஆகியோரின் அன்பு சகோதரியும், யசோதரன், நிரஞ்சன், கிருஷாந்தி, சன்ஜீவன், சிந்துஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் பிரபாகரன், பிரஷாந்தினி, குகப்பிரியா ஆகியோரின் பாட்டியும், துஷாகரன், வைஷ்ணவி, தபிஷன், நதிஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**மானிப்பாய் வீதி,**
**நாலுகால்மடம்,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 9796 883**

(CS 19193) 1/6

# 6ஆம் மாத நினைவலைகள்

அன்னை மடியில்
27 . 03 . 1960



ஆண்டவன் அடியில்
09 . 10 . 2021

அமரர்

## திரு.குழந்தைவேலு குணானந்தசீலன்

**உரிமையாளர், சீலன் லொறிபொடி பில்டர்ஸ்**
**R.M.K Transport)**

**திதி:பூர்வபக்க திருதியை**

பாதுகாப்பின் உறைவிடமாகவும்
பாசத்தின் சிகரமாகவும் - வாழ்ந்த
எம் அன்புத் தந்தையே!
விழி மூடி எம்மை வழிகாட்டும் - எங்கள்
ஒளியான தந்தையே! ஓடி வருவீரோ !! எமக்காய் - இன்னொருமுறை
எங்களுக்கு வாழ்வை தந்து விட்டு - நீங்கள்
சென்று விட்டீர்கள் தவிக்கின்றோம் ஏங்கி - இன்று
நித்தமும் நினைவில் கொண்டு
நிஜத்தில் உங்கள் பெற்றோரிடம் கலந்திட்ட
உங்கள் ஆத்மா சாந்திபெற உங்களுக்கு இறைவனாய்
இந்த உங்கள் பெற்றோரை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**கண்டுவில் ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

(CR 37782) 1-6

# மரண அறிவித்தல்



## கந்தசாமி தியாகராஜா

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் தற்போது பரந்தனை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தசாமி தியாகராஜா நேற்று (03.04.2022) ஞாயிற்றுக் கிழமை பரந்தனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தசாமி (கோவளம்) தம்பதி யரின் புதல்வரும் காலஞ்சென்ற தியாகராஜா சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவதாசன் மகேஸ்வரி ஆறுமுகம்- விஜயலட்சுமி மற்றும் காராளசிங்கம் கமலாதேவி (ஓய்வுபெற்ற அதிபர் - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் -களபூமி காரைநகர்), கனகலிங்கம்- ஈஸ்வரி ஆகியோ ரின் அன்பு தம்பியாரும், கந்தசாமி சூரியமூர்த்தி காலஞ்சென்ற சந்திரமூர்த்தி ஆகியோரின் அன்பு அண்ணனும், காலஞ்சென்ற சிவதீபன் மற்றும் சிவப்பிரியா சிவனருள் சிவஅரசன் சிவசூரியா ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்ற வர்களான சிவதாசன் ஆறுமுகம் மற்றும் காராளசிங்கம் கனகலிங்கம் சந்திர மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திவானியின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.04.2022) திங்கட்கிழமை 12 மணியளவில் அவரது தம்பியாரின் கந்தசாமி சூரியமூர்த்தியின் இல்லத்தில் (பரந்தன்) நடைபெற்று, பூதவுடல் தகனகிரியைக்காக பரந்தன் இந்து மயானத் திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**கந்தசாமி சூரியமூர்த்தி**
**(தம்பி சூரி-பரந்தன்)**

# மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 10 . 1941



மறைவு
02 . 04 . 2022

## நாகலிங்கம் முருகையா

கொட்டைக்காட்டை பிறப்பிடமாகவும் கூழாவடி கிழக்கு ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முருகையா அவர்கள் கடந்த (02.04.2022) சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பிள்ளைக்குட்டி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும் மயில்வாகனம் (ஜேர் மனி) அவர்களின் அன்புத் தந்தையும், சுபாசினியின் (ஜேர்மனி) அன்பு மாமாவும், நாரணா, ரூவினா, கஸ்வின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் காசிநாதன், நாகேஸ்வரி, பரமேஸ்வரி (பிரான்ஸ்), திருச்சிற்றம் பலம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கைராசிப்பிள்ளை, கதிர்காமநாதன் மற்றும் செல்லம்மா, சின்னத்துரை (பிரான்ஸ்), விமலா (பிரான்ஸ்), கணேசு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2022) செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டை.**
**077 8912 880, 077 604 7100**

**தகவல்:**
**நா.காசிநாதன்**
**சகோதரர்**

(CS 19186) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூண்டோடு...

நேற்று இரவு அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது. முன்னதாக நேற்றிரவு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தனர்.

அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் பதவி விலகல் கடிதங்களைக் கையளித்துள்ளமையை கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன உறுதிப்படுத்தினார்.

நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைக்கு ஜனாதிபதி கோத்தாபயவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் இணங்கியுள்ளனர் என்று அறியமுடிகின்றது. எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்குள் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, இடைக்கால அரசாங்கம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி இடைக்கால அரசை அமைக்க வேண்டும் என்ற யோசனைக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது என்று தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள அரசாங்கத்தில் பிரதமராக புதியவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளித்துள்ளார் என்று நேற்று இரவு தகவல்கள் வெளியாகியிருந்தபோதும், பிரதமரின் ஊடகப் பிரிவு அந்தத் தகவலை மறுத்தது. எனினும் மஹிந்த ராஜபக்ச விரைவில் தனது பதவி விலகலை அறிவிக்கலாம் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (அ-எ)

## சமூக...

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

ஆயினும் நாட்டில் பெரும்பாலானோர் 'வி.பி.என்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சமூக வலைத்தளங்களை அணுகினர். நாட்டின் டிஜிற்றல் தொழிநுட்பம், தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்சவும், விபிஎன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சமூகவலைத்தளத்தில் இட்ட பதிவொன்றில், சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டமைக்குத் தனது கண்டனங்களைத் தெரிவித்திருந்தார்.

சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டமைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தது. மக்களின் கருத்துரிமைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயற்பாடுகளில் இதுவும் ஒன்று அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருந்தது.

கடுமையான எதிர்ப்புக்களை அடுத்து, மாலை 3.30 மணியளவில் சமூக வலைத்தளங்களின் முடக்கம் நீக்கப்படும் என்று தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு அறிவித்தது. (எ-இ)

## வெளிநாடுகளிலும்...

கும் இலங்கையர்களும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன், பேர்த், கான்பெரா, ஹோபார்ட் ஆகிய நகரங்களிலும், நியூஸிலாந்தின் ஒக்லாந் நகரிலும், பிரிட்டனின் லண்டன் நகரிலும் பெருமெடுப்பில் மக்கள் போராட்டங்கள் நடத்தப்பட்டன. தென்கொரியாவிலும் நேற்று இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கையர்கள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். அவரது சொந்த இடமான அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர். (அ-எ-இ)

## யாழ்......

வித்தனர்.

பொலிஸாரின் விசேட வீதிச் சோதனை நடவடிக்கைகளில், ஊரடங்கு வேளையில் தேவையற்று நடமாடிய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கொழும்பிலும் நாட்டின் பல பகுதிகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் நேற்று வீதிகளில் இறங்கி அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். ஆயினும் யாழ்ப்பாணம் நேற்று அமைதியாகவே இருந்தது. (எ-125)

## தடையற்ற...

ஒன்றில் ஏறிய ஒருவர், அங்கிருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

அவர் உயிரை மாய்ப்பதற்கு முன்னர், மின்வெட்டை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். 53 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். சுமார் 400 மீற்றர் உயரத்தில் இருந்து வீழ்ந்த இவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-இ)

## நிமல்...

நேற்று இரவிரவாக பெரும் திரளான மக்கள் முற்றுகையிட்டு கோஷங்களை எழுப்பிய வண்ணம் இருந்தனர். (எ-இ)

## ஓயவில்லை...

ஜனாதிபதிக்கும் எதிரான மக்கள் போராட்டங்கள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்பட்டன. மக்கள் தன்னெழுச்சியாக நடத்திய போராட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாது பொலிஸார் திணறினர். சில இடங்களில் கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதல், நீர்த் தாரைப் பிரயோகம் என்பனவும் பொலிஸாரால் நடத்தப்பட்டன. ஆயினும் நேற்று இரவும் மக்களின் போராட்டம் தொடர்ந்தது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்றுள்ள நிலையில் அத்தியாவசியப் பொருள்கள், சமையல் எரிவாயு, எரிபொருள் என்பவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அதே நேரம் நாளாந்தம் பல மணி நேரம் மின்சாரத் தடை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்தநிலைமையால் சாதாரண மக்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத நிலைமையே நாட்டில் காணப்படுகின்றது. தற்போதைய அரசின் தூர நோக்கற்ற செயற்பாடுகளே இந்த நிலைமைக்குக் காரணம் என்று கூறப்படும் நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவி விலகக் கோரி நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

போராட்டங்கள் தீவிரம் பெற்றுள்ள நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் திடீரென நாட்டில் பொது அவசர கால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின்னர், நேற்று முன்தினம் மாலை முதல் இன்று காலை வரையில் திடீரென ஊரடங்குச் சட்டத்தை அரசாங்கம் அறிவித்தது. நேற்று நள்ளிரவு முதல் சமூக வலைத்தளங்களும் முடக்கப்பட்டன. அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிரான மக்கள் போராட்டங்கள் ஞாயிற்றுக்கிழமையான நேற்று தீவிரமாக இடம்பெறலாம் என்ற அச்சத்திலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை அவசர அவசரமாக மேற்கொண்டது.

### ஊரடங்கை மீறிப் போராட்டம்

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தபோதும் கொழும்பிலும், ஏனைய இடங்களிலும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நேற்றுத் தீவிரம் பெற்றன. மக்களின் போராட்டங்களை அடக்க பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் சுதந்திர சதுக்கத்துக்குச் செல்ல முயன்றபோது, சுதந்திர மாவத்தையில் பொலிஸார் வீதியில் பெரும் இரும்புத் தடைகளை ஏற்படுத்தி ஆர்ப்பாட்டம் முன்னகர்வதைத் தடுத்து நிறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டதுடன், பொதுமக்களும் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைப்பதற்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

அதேநேரம், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் பெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸாரின் தடைகளை மீறி ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்கலைக்கழகத்தில் இருந்து கண்டி நகரை நோக்கி அவர்கள் பேரணியாகப் புறப்பட்டனர்.

கலஹா சந்திக்கு அருகில் வீதித் தடைகளை ஏற்படுத்திய பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களைக் கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர். ஆயினும் மாணவர்களின் போராட்டம் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. ஆர்ப்பாட்டம் நடத்திய போது பேராதனை போதனா மருத்துவமனை மருத்துவர்களும், பணியாளர்களும் மருத்துவமனை வளாகத்தில் இருந்து கைகளைத் தட்டி மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்ததைக் காணமுடிந்தது. மாணவர்கள் வீதித் தடைகளை அகற்றி பேரணியைத் தொடர முயன்றபோது, பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டனர். அதன்போது மாணவர்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்குடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

கண்ணீர்ப் புகைக்குண்டுகளை எடுத்து பொலிஸார் மீதும் மாணவர்கள் எறிந்ததில் பொலிஸாரும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். மாலை 3 மணி வரை கலஹா சந்தியில் மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ராஜபக்சவினரின் கோட்டை என்று கூறப்படும் பொலநறுவையில் ஆயிரக்கணக்கானவர்கள் நேற்று அரசாங்கத்துக்கு எதிரான பேரணியை முன்னெடுத்தனர். அநுராதபுரத்திலும் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதில் சாலியபுரத்தைச் சேர்ந்தவர்களும் பங்கெடுத்தனர். கோத்தாப்ய ராஜபக்ச பதவியில் இருந்து விலக வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். பிரதேசவாசிகள், பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் இருந்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன், பேரணியாக விஜயராம முச்சந்தியை அடைய முயன்றபோது, அந்தப் பகுதி பலப்படுத்தப்பட்டு முப்படையினரும் களமிறக்கப்பட்டிருந்தனர். அத்துடன் வீதித் தடைகள் போடப்பட்டிருந்தமையால் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னகர முடியாத நிலைமை காணப்பட்டது. அங்கு அரசாங்கத்துக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவற்றைத் தவிர கிழக்குப் பல்கலைக் கழகம், மாலபே, மகரகம, மீகொட பாதுக்க பிரதான வீதி, அவிசாவளை, பிலியந்தலை, வீரகொட்டிய, ராகம பேரளந்த சந்தி, அம்பாந்தோட்டை, சூரியவெவ குருநாகல், கொட்டியகாவத்தை, தலவத்தகொட, கொழும்பு டுப்பிளிகேசன் வீதி, பம்னுவ, தெஹிவளை, இரத்மலான, கண்டி, காலி மற்றும் களனி பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவும் மக்கள் போராட்டங்கள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களும், ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்தனர். மவுன்டன்லெனியாவில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மனைவிக்குச் சொந்தமான கால்டன் முன்பள்ளிக்கு முன்பாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று இரவு கொழும்பு,கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்கு முன்பாகக் கூடிய நூற்றுக்கணக்கானோர் அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிராகக் கோஷங்களை எழுப்பினர். இரவிரவாக அவர்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையில் பல இடங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் இரவிரவாகப் போராட்டங்களில் ஈடுபட்டவண்ணம் இருந்தனர். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஊரடங்கான நேற்று கொழும்பின் பல பகுதிகளில் பல்வேறு வகையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் ஒளிப் படத் தொகுப்புக்கள். (ஓ,5)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 06 பரப்புக்காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி)
- 20 அடி பாதையுடன்

தொடர்பு : 077 623 4204

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 70 பரப்புக்காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை

- 16 அடிப்பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம்-பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200M தூரத்தில்
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ஒருபரப்பின் விலை ( 300000/=) மூன்று லட்சம் மட்டும்.

தொடர்பு :
074 291 3725 /074 291 3726/074 291 3727

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 55 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 200 தென்னைகள் உள்ளன.

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,
ஒரு பரப்பின் விலை 450000.00
(தரகர் தேவையில்லை)

(CS 19188)1-6

ஜெயம்:-
077 814 7389, 077 805 1655

## விற்பனைக்கு

பழைய வீடு, கதவு, யன்னல், ஓடு, மரங்கள் விற்பனைக்கு உண்டு.

T.P: 077 7299 212, 076 103 1278

## வேலையாட்கள் தேவை

மன்னாரில் உள்ள வெதுப்பகத்திற்கு வேலை தெரிந்தவர்களும் (Bass), உதவியாளர்களும் (Labours) தேவை.

தொடர்புகளுக்கு: 076 089 8020

## 2ஆம் வருட நினைவு தினம்



தோற்றம் 13 . 11 . 1956
மறைவு 26 . 03 . 2020

"ஈச்சமோட்டையின் தத்துவஞானி" என்று சான்றோர்களால் அழைக்கப்பட்ட

**சத்தியானந்தசிவம் தவசீலன் J.P**
(தவம்)

அவர்கள் இல்வாழ்வினை நிறைவு செய்து
இரண்டு வருடங்கள் ஓடி மறைகின்றது.
இருந்த போதிலும் தொடர்ந்தும்
அவர் எம்முடனே வாழ்கின்றார் என்ற
உணர்வு எம்மோடு தொடர்கின்றது...

" அன்பே சிவம் "
"ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி"

(CS 19177)1-6

நினைவுகளுடன்..
குடும்பத்தினர்.

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் 147 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

**A-9** பிரதான வீதியில் அமைந்துள்ளது. நிறுவனங்கள், சுற்றுலாத் தலங்கள் மற்றும் திருமண மண்டபம் அமைப்பதற்கு ஏற்ற வசதியான இடம். நல்ல தண்ணீர்.

பார்வையிடும் நேரம்:
காலை 6.00 - மாலை 6.00 மணிவரை
தரகர் தேவையில்லை.
(ஒரு பரப்பின் விலை 10 லட்சம் ரூபாய்)

தொடர்பு:- **ஜெயம்**

**077 241 7589**
**077 8051 655**




(CS 19188) (1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org